நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே அந்த ஜெராக்ஸ் இயந்திரங்களை இயக்குவதற்குத் தனியாக பணியாளர்கள் நியமிக்கும் எண்ணம் நம்முடைய அரசிற்கு உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனைப் பராமரிப்பதற்கும், நிர்வகிப்பதற்கும் தனியாக ஒரு ஆளை நியமிக்கக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபடி, சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரையின்படி மற்றத் துறைகளில் மிகுதியாகக் காணப்படுகின்ற ஊழியர்களை நீதிமன்றங்களுக்கு பீமீஜீஷுமீணீமீவீஷீஸீ செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே அது நிறைவேற்றப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 265, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

265—

கட்டடம்

***9485—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

2003 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர் நீதிமன்றத்தால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது. மைய அரசின் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் இச்செயற்குறிப்பு பரிசீலிக்கப்படும்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூரின் தலைமையிடமாக இருக்கின்ற காரணத்தினால் 30 ஆண்டுகளுக்கு முன்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1994 ஆம் ஆண்டு அதே நீதிமன்றத்தில் சிவில் கோர்ட்டும் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு கோர்ட்டுகளும் ஒன்றாக இயங்கினாலும்கூட இடவசதி இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதோடு கோர்ட் கட்டடம் கட்டுவதற்காக 20 ஆண்டுகளுக்கு முன்பே, வேடசந்தூர் சந்தை மைதானத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் இடம் ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்யப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்தச் சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வருகின்ற நிதியாண்டிலாவது நிதி ஒதுக்கீடு செய்து அங்கு கோர்ட் கட்டடத்தைப் புதியதாகக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், விருந்தினர் மாளிகை மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு ஆகியவற்றை ரூ.2 கோடியே 27 இலட்சத்து 85 ஆயிரம் செலவில் கட்டித்தரும் செயற்குறிப்பு முன்னுரிமைப் பட்டியலில் மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே மைய அரசின் நிதியுதவி கிடைக்கப் பெற்றதும் முன்னுரிமை அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப இக்கட்டடப் பணி மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர்களுடைய தகவலுக்காக

ஏற்கெனவே நான் பலமுறை இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கின்றேன். ரூ.140 கோடி செலவில் கிட்டத்தட்ட 77 செயற்குறிப்புகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மத்திய அரசிற்கு இரண்டு நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும் கூட இன்னும் நிதியுதவி அளிக்கவில்லை. நிச்சயமாக அவர்கள் இந்த ஆண்டில் அளிப்பார்கள் என்று கருதுகின்றோம். அவ்வாறு அளிக்கின்ற பட்சத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை அடிப்படையில் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. மீண்டும் அதையே சொல்கிறேன். விரைவாக வேடசந்தூருக்கு நீதிமன்றம் கட்டித்தந்து உதவும்படி அன்போடு வேண்டிக் கேட்டு, அம்மாவினுடைய ஆசியுடன் அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 266, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

266—

மருத்துவமனை

•23215—திரு. த. ஆறுமுகம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருவொற்றியூர் நகரத்தில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.